கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்

எஸ். எம் பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. Fernando
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed.
580, Hoapital Road,
Near Bank of Ceylon,
Jaffna.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 04 சனிக்கிழமை (18-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 52

# ஈழத்தமிழ் அகதிகளை பலவந்தமாக அனுப்புவதைத் தடுத்து நிறுத்துக!

### கைது

கொழும்பு, ஜன. 18

பழக்கடையில் வைத்து 570 கிராம் ஹெரோயின் போதை பொருளைக் கடத்த முயன்றார் என்று கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருச்சியிலிருந்து விமானம் மூலம் வந்த இந்த இளைஞர் தற்பொழுது பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். [இ-த]

## ஐ. நா. செயலாளருக்கு புலிகள் அவசர மகஜர்

யாழ்ப்பாணம், ஜனவரி 18

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைப் பலவந்தமாக - இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரை அவசர மகஜர் மூலம் கேட்டிருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள அகதி முகாம்களுக்கு தமிழர்களைப் பலவந்தமாக அனுப்புவதன் மூலம், அகதிகளுக்கு பாதுகாப்பும் மகத்துவமும் அளிக்கும் ஐ. நா. சாசனங்களை இந்திய, ஸ்ரீலங்கா அரசுகள் மீறியுள்ளதாகவும் அந்த மகஜரில் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள அந்தக் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மீளக் குடியமர்த்தல் என்ற போர்வையில் — ஸ்ரீலங்காவில் ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் — தென்னிந்தியாவில் இருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகளை பலவந்தமாகத் திருப்பி அனுப்ப ஏற்பாடாகி இருக்கிறது. அதனால் அவர்கள் எதிர்நோக்கக்கூடிய கஷ்டங்களையும் மோசமான நிலையையும் தங்களின் அவசர கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளின் இராணுவ அட்டூழியங்களின் விளைவாக இந்தியாவில் தஞ்சம் கோரியிருக்கும், சுமார் இரண்டு லட்சத்து 30 ஆயிரம் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு இந்திய அரசாங்கமும், ஸ்ரீலங்கா அரசாங்

(3ஆம் பக்கம் பார்க்க)

## சகல தீவுகளுக்கும் செஞ்சிலுவையினர் விஜயம்

### 25 ஆம் திகதி செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 18

தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் சகல தீவுகளுக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் எதிர்வரும் 25 ஆம் திகதி விஜயம் செய்ய உள்ளனர்.

தீவுப் பகுதிகளில் படையினரிடம் சிக்கி உள்ள மக்களை அவர்கள் நேரில் பார்வையிட்டு அவர்களின் மருத்துவ, உணவுத் தேவைகள் குறித்துக் கேட்டறிவார்கள்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் ஏற்கனவே நெடுந்தீவு சென்று திரும்பியது தெரிந்ததே. [இ-3]

## இலங்கை மீனவர் ஐவர் தமிழக காவல் படையிடம்

### படகும் கைப்பற்றப்பட்டது

சென்னை, ஜன. 18

கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த மீன் பிடிப் படகு ஒன்றை தூத்துக்குடி கடலோரப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

அப்படகில் இருந்த 5 மீனவர்களையும் பொலீஸார் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இச் சம்பவம் நடந்தது. [இ-த]

## அமைச்சர் பதவியிலிருந்து தொண்டாவை நீக்குங்கள்!

### காலி மகா சங்கம் தீர்மானம்

திரு. தொண்டமானை அமைச்சரவையில் இருந்து நீக்கும்படி அரசாங்கத்தை காலி மாவட்ட மகா சங்கம் கோரியுள்ளது.

காலி நகர மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மகா சங்கக் கூட்டத்தில் இது தொடர்பான பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தென் மாகாணத்தைச் சேர்ந்த வண பள்ளத்தற சுமணஜோதி அனுநாயக்கா தேரர் இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு எதிரான முறையில் அமைச்சர் தொண்டமான் செயல்படுவதால் அவர் அமைச்சரவையில் இருந்து அகற்றப்படவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## போராளிகளின் சிலைகள் இன்று தீருவிலில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

வல்வெட்டித்துறை தீருவில் பன்னிரு வேங்கைகள் நினைவுச் சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள போராளிகளின் சிலை திறப்பு நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு, கடற்புலிகளின் வடமராட்சி வடக்கு அரசியல் பொறுப்பாளர் திரு. ப. சங்கிலியன் தலைமையில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் இச் சிலைகளை உருவாக்கிய ஓவியர் ரமணியும் அவரது உதவியாளர் ஓவியர் இளங்கோவும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவர்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தத்தை விளக்கும் வரலாற்று முக்கியத்துவம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## திங்களன்று நெடுந்தீவுக்கு கப்பலில் 150 பேர் செல்வர்

### அங்குள்ள 25 பேர் திரும்பவும் ஏற்பாடு

நெடுந்தீவு ஜன. 18

தீவுப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து நெடுந்தீவுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் கடந்த அக்டோபர் மாதம் முதல் யாழ். நகரில் தங்கி இருக்கும் நெடுந்தீவு மக்களில் சுமார் 150 பேர் எதிர்வரும் திங்கட்கிழமை கப்பல் மூலம் அங்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

'குமுதினி', 'மெரிதல்' கப்பல்கள் மூலம் இவர்களை அழைத்துச் செல்லவும் நெடுந்தீவிலிருந்து வெளியேற விரும்பும் 25 பேரை யாழ்ப்பாணம் அழைத்து வரவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [இ-3-111]

## காங்கேசன் ஊடாக உணவு இப்போது சாத்தியமில்லை!

யாழ்ப்பாணம், ஜன. 18

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக உணவுப் பொருள்களை குடாநாட்டுக்குள் எடுத்து வரும் திட்டம் இப்போதைக்கு நடைமுறைக்கு வரும் சாத்தியம் இல்லை என்று தெரிய வந்துள்ளது.

படையினர் தரப்பில் தங்களுக்குள்ள வசதியின்மைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

கடந்த புதன்கிழமை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி, பலாலி இராணுவ முகாமில் பிரிகேடியர் விஜய விமலரத்தினவுடன் நடத்திய பேச்சுக்களின்போது காங்கேசன் ஊடாக உணவுப்பொருள்களைத் தருவிப்பது குறித்து ஆராயப்பட்டது.

காங்கேசன்துறைப் பகுதியில் உணவுப் பொருள்களைக் களஞ்சியப்படுத்த போதிய வசதியில்லை. அதனால் அந்த சேதமடைந்த நிலையில் உள்ள களஞ்சியம் திருத்தப்பட வேண்டும் என்றும் —

போதிய உணவுப் பொருள்களை களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்ல லொறி வசதி இல்லை என்றும் —

அந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னரே பொருள்கள் எடுத்து வருவது சாத்தியமாகும் என்றும் — படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

## அகதிகளைத் திருப்பி அனுப்ப

## ஐ. நா. தூதரகத்தின் உதவி கோரப்பட்டுள்ளதாக தகவல்

கொழும்பு, ஜன. 18

"தமிழகத்தில் இருந்து திரும்பி வரும் அகதிகளுக்கு உதவ அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அநுசரணையை இலங்கை அரசு நாடியுள்ளது."

— இப்படிக் கூறியுள்ளார் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ராஜா அமரசேகரா.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ. நா. அகதிகள் தூதரகத்தைக் கலந்தாலோசிக்காமலேயே தமிழகத்தில் இருந்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கைதான மீனவர்கள் குறித்து 25 ஆம் திகதி பேச்சுவார்த்தை

குடாநாட்டின் கடற் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 18 மீனவர்களை விடுவிப்பது குறித்தும் —

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் மீனவர்களை படையினர் தாக்குவதாகக் கூறப்படுவது குறித்தும் காரைநகர் கடற்படைத் தளபதியுடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் பேச்சு நடத்துவர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி காரைநகர் கடற்படைத்தளத்தில் பேச்சுக்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளதாகவும் அறியவருகிறது. [உ-3]

## நானாட்டான் பகுதியில் நேற்று தாக்குதல் சம்பவம்

கொழும்பு, ஜன. 18

மன்னார் மாவட்டத்தில் நானாட்டானுக்கும் வங்காலைக்கும் இடையில் நேற்று ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதைத் தொடர்ந்து தாக்குதல் நடந்த இடத்துக்கு நானாட்டான், வங்காலை, சிலாவத்துறை முகாம்களில் இருந்து மேலதிக படையினர் அனுப்பப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3]

## இரு அரசியல்வாதிகளின் காவலர்கள் சுடப்பட்டனர்

### கல்முனையில் சம்பவம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரபின் மெய்ப்பாதுகாவலர் சுட்டபோது தமது மெய்ப்பாதுகாவலர் படுகாயமடைந்தார் என்று அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கல்முனையில் இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

ஆனால் தமது மெய்ப்பாதுகாவலர் மீதுதான் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் சுட்டார் என்று ஜனாப் அஷ்ரப் பதில் குற்றஞ்சாட்டியுள்ளார். (உ-எ)

## லீற்றர் 36 ரூபாவுக்கு ம. எண்ணெய் விற்க முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 18

ப. நோ. கூ. சங்கங்கள் பாவனையாளர்களுக்கு ஒரு லீற்றர் மண்எண்ணெய்யை 36 ரூபாவிற்கு விற்க உள்ளன.

நேற்று உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், வர்த்தக முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

## கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் "இடிமுழக்க" நடவடிக்கை!

### சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 18

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட இடிமுழக்கப் புயல் [Thunder Storm] இராணுவ நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிக்க விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது அதிகாரி ஒருவர் உட்பட 9 படையினர் உயிரிழந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3]

## முச்சந்தி முரளி



அப்ப...... அரசியல்வாதிகளின்ரை காவலர்களுக்கும் காவல் போடவேணும் போலை......!

## ★ விடுதலைப் புலிகளுக்கு எதிராக

# இந்திய - ஸ்ரீலங்கா அரசுகள் கூட்டு நடவடிக்கைக்கு முஸ்தீபு!

கொழும்பு, ஜன. 18

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் கூட்டணி அமைத்து செயற்படும் முயற்சியில் ஸ்ரீலங்காவும் — இந்தியாவும் நெருக்கமாக இணைந்து ஈடுபட்டுள்ளன.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டத்தில் பரஸ்பரம் ஒத்துழைப்பதற்கு இரண்டு அரசாங்கங்களும் இணங்கியுள்ளன என்றும் அந்த அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தனவாம்.

இரண்டு நாடுகளுக்கும் பெரிய அச்சுறுத்தலாக விளங்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவையை இரண்டு அரசாங்கங்களும் அங்கீகரித்துள்ளன என்றும் 'ஐலண்ட்' செய்தி தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான [illegible] ஆக —

இரண்டு நாடுகளினதும் பாதுகாப்புப் படைகளுக்கு இடையே நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக வடக்கு—கிழக்கு மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுக்களை ஸ்ரீலங்கா அரசு புதி

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Wheel Chair முச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இந்திரபவனம், மான் கல்லூரி ஒழுங்கை, உடுவில். [5005]

## தேவை

யாழ். வர்த்தக புலன் விசாரணை பாதுகாப்புச் சேவையினருக்கு உடனடியாக பாதுகாவலர்கள் தேவை. நேர்முக பரீட்சை 20-01-92 அன்று காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை பதிவாளர் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்னும் விலாசத்தில் நடைபெறும். [19354]

## திருத்துனர் தேவை

அனுபவமும், ஆற்றலும் உள்ள மணிக்கூடு திருத்துனர் தேவை. நேரில் வரவும். அல்டி 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1300]

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு ஆண், பெண் மணமக்கள் எல்லா உத்தியோகத்திலும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19350]

## புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

## ஆசிரியர் பயிற்சி

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்: 15-1-1992 ஒரு வருட பயிற்சி. O/L பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்கள் கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம். [சி/1322]

## வெளிவந்து விட்டது

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கணக்கியல் உ.த. [9 வருடம்] வினா-விடைகள் வெளிவந்து விட்டன. பெற்றுக்கொள்ளும் இடங்கள்: அறிவகம் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி. சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1285]

## அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [சி/1284]

## அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

## புலமைப் பரிசில்

ஆண்டு 6 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் [தமிழ், கணிதம்], 19 - 01 - 92 ஆண்டு 5 [தமிழ், கணிதம், ஆங்கிலம்], 26 - 01 - 92 ஆண்டு 4 [தமிழ், கணிதம், ஆங்கிலம்] 2- 2 - 92 ஞாயிறும் வெளியிடப்படும். பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19340]

## அம்பாள் திருமண சேவை

Engineer P.H.D., வயது 37 மணமகனுக்கு Doctor மணப்பெண்ணும், B A.- (Hons) 29 வயது மணமகனுக்கு A/L மணப்பெண்ணும் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [19369]

## நாற்றுக்கள் விற்பனைக்கு

விளாத்தியில், நாரத்தையில் ஒட்டிய நல்ல இன தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/1276)

## சிறுவர் பாடசாலை

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆரம்பம்: 6-1-1992 விண்ணப்பப் படிவங்களை றிம்மர் மண்டபம், வேம்படி வீதியிலும், கில்னர்மண்டபம், வண்ணார் பண்ணையிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி/1323]

---

## நாடக அரங்கக் கல்லூரி

நடத்தும்

**G. A. Q**

வகுப்புகள்

நாடகமும் அரங்கியலும் நுண்கலைகள்

**22- 01- 1992** 4. 00 P.M

**பாலர் கல்விக் கழகம்**

49/5, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. க. ஸ்ரீகணேசன்

[19380]

---

சுகாதார திணைக்களம் - யாழ்ப்பாணம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

கீழ்க் காணும் அளவுகளையும் விவரங்களையும் கொண்ட 40 (நாற்பது) மரப்பெட்டிகள் தயாரித்து வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 21-01-92-ம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கோரப்படுகின்றன.

நீளம் - 3 அடி, அகலம் - 2அடி, உயரம் - 2அடி

இப் பெட்டிகள் 3/4 அங்குல பலா பலகையினால் செய்யப்பட்டு 2 இரும்புப் பிணைச்சல்கள் [4"X2½"] 1 இரும்பு கொண்டிப்பட்டம் [4"] உட்புறமாகப் போடப்பட்ட மூடிகளுடன், பெட்டியின் இரு பக்கங்களிலும் மடிக்கத்தக்க இரும்புப் பிடிகள் உள்ளதாகவும், பெட்டியின் நாலு மூலைகளுக்கும் 2" X 2" சிலாகை வைக்கப்பட்டு மூடியின் மேற்புறம் பெட்டியின் அடிப்புறமும் 2" X 1" இரண்டு சிலாகைகள் பொருத்தி பலப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். மூடியின் நாலு பக்கங்களுக்கும் 1½" அகல பட்டிகள் பொருத்தப்படல் வேண்டும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரகாரர் 05-02-1992 ஆம் திகதிக்குள் மேற் குறிப்பிட்ட 40 மரப் பெட்டிகளையும் திருப்தியான முறையில் தயாரித்து வழங்க வேண்டும்.

இதற்கான கேள்விப்பத்திரங்கள் கிடையாததால் கேள்வித்தாரர்கள் கேள்விப்பத்திரங்களை தாங்களே தயாரித்துக் கொள்ளவும்.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சு. சே. பி. ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
17-01-1992

[சி-1340]

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வன் ப. குசநாதன்

(யாழ். புனித ஜோன் பொஸ்கோ, ஆண்டு 4 மாணவன்)

தோற்றம்: **29-10-1982**

மறைவு: **23-10-1991**

ஆண்டாண்டு காலமாய் அழகுக் கலை பயின்று
தூண்டா விளக்காகத் துலங்கினாய் - மீண்டும்
வாராயோ எங்கள் வம்சக் குறையகற்ற
சேராயோ சேயாய்நீ யே!

எங்கள் உயிருள்ளவரை உனது நினைவுகளுடன் வாழும்;

அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி.

67/42, சினிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.

[19377]

---

## ★ திருமண அழைப்பு ★

நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு தைத்திங்கள் 4 ஆம் நாள் இன்று (18-01-1992) சனிக்கிழமை இரவு 8-24 முதல் 10-48 வரையுள்ள ★ சுபவேளையில் ★

| | | |
|---|---|---|
| பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடியை சேர்ந்த கோபாலரத்தினசிங்கம் **ரவிக்குமார்** அவர்களுக்கும் | ★ | காளி கோவிலடி சண்டிலிப்பாயைச் சேர்ந்த பரராஜசிங்கம் **சகீலா** அவர்களுக்கும் |

திருச்சியில் திருமணம் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

ப. ரவிஸ்வரன்,
[மணமகளின் சகோதரன்],
C/o திருமதி செல்லாச்சி,
காளி கோவிலடி, சண்டிலிப்பாய்.

[19364]

---

வடமாகாண

## விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

★ **ட்றெபோண்**

கத்தரி, கோவா போன்ற பயிர்களை அழிக்கும்

தண்டுக்குத்தி, காய்துளைப்பான், இலை கோதிப்புழு, வெள்ளை ஈ போன்றவற்றை

உடனே அழிக்கும்

ஒரு புதிய கிருமி நாசினி

★ **செலிக்றொண்**

மிளகாய்ச் செடியிலையில் பனிப்பூச்சியாலும், சிற்றுண்ணியாலும் உண்டாகும்

இலைச் சுருளை (குருமன் நோய்) ஊடுருவிச் சென்று

கட்டுப்படுத்தும் கிருமி நாசினி.

கமநல சேவை நிலையங்களிலும், ஏனைய விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

**HARRISONS CHEMICAL [Pvt.] LTD.**

[5008]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29 — 11 — 1961

மறைவு: 17 — 12 — 1990

## சண்முகம் ரவீந்திரராஜா

(கொக்குவில்)

எங்கள் அன்புத் தெய்வமே ரவீந்திரராஜா! இடியோடு உன் பிரிவுச் செய்தி பேர்லினில் இருந்து வந்ததடா. என்றாவது ஒரு நாள் உன்னைப் பார்ப்போம் என்று எண்ணி இருந்தோம். ஆனால் எங்கள் எல்லோரையும் தவிக்க விட்டு போய் விட்டாயே!
அந்த நாளில் நீ நின்ற உன் வீட்டு முற்றம்,
நீ படித்த பாடசாலை எல்லாம் எங்கள் கண்முன் வந்து கண்ணீரை வரவழைக்கின்றது.
மீளமுடியாத உலகிற்கு சென்று விட்ட உன்னை, இழந்த சோகம் என்றுமே தணியப் போவதில்லை. ஓராண்டாகி விட்ட உன் பிரிவு எங்கள் மனதில் என்றுமே அழியாதிருக்கும்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் கண்ணீர் துயரில் வாடும்;
உன் அம்மா, அப்பா,
சகோதரர்கள், சகோதரி, ஆச்சி,
மாமா, மாமி, அண்ணிமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

---

தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்

## வருடாந்த குருபூசை

19- 01- 1992 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி.

அடியார்கள், அன்பர்கள் அனைவரும் கலந்து ஆனந்தித்து, அருள்பெற்று உய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

ஆச்சிரம அடியார்கள்.

கைதடி - வடக்கு.

(19338)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(A/L கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**92** பிரிவு - 2 *DAY CLASSES*

**ஆரம்பம்: 21 - 01 - 1992**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | ... | திரு. கலாகரன் |
| வர்த்தகவியல் | ... | திரு. ரட்ணம் |
| கணக்கியல் | ... | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | ... | திரு. பிரபாகரன் |

மற்றும் சகல பாடங்களும் நடைபெறும்.

மு. குறிப்பு: ஒவ்வொரு பாடங்களும் வாரத்தில் 5 மணித்தியாலம் நடைபெறும்.

[சி-1292]

---

கலைவண்ணம் மிளிரும் கவர்ச்சியான அச்சு வேலைகளைச் செய்வதற்கு விரும்புகிறீர்களா?

தாமதியாது எங்களிடம் வாருங்கள்

★ நாவல்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நினைவு மலர்கள்
★ பில் புத்தகங்கள்
★ பரீட்சை வினாத்தாள்கள்

இன்னும் இவை போன்ற உங்கள் ஓடர்களை உரிய நேரத்தில் சிறந்த முறையில் அச்சிட நாடுங்கள்

## உதயன்

292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.

---

## தவறுதலுக்கு மன்னிக்கவும்

அமரர் கந்தலிங்கம் சதீஸ்குமார்
(4 ஆம் ஆண்டு மருத்துவபீட மாணவன்)

15-01-1992 உதயனில் வெளியிட்ட நன்றி நவிலலில், இந்து இளைஞர் திருமுறைக் கழகம், மண்டைதீவு என்பதற்குப் பதிலாக இந்து இளைஞர் மன்றம் என தவறுதலாக வெளியிட்டமைக்கும், யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவ மாணவ மன்றத்தினருக்கு நன்றி தெரிவிக்கத் தவறியதற்கும் மன்னிப்புக் கோருகிறோம்.

தகவல்:
கந்தலிங்கம் குடும்பத்தினர்.

23, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

(19366)

---

## 'காப்பரண்'

முத்திங்கள் இதழ்

## வெளியீட்டு விழா

காலம்:- 19-01-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்:- யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்.

அனைவரையும்
**அன்புடன் அழைக்கின்றோம்**

பனை - தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்

[சி-1338]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தேவாலயங்களில் தைப்பொங்கல்

கடந்த புதன்கிழமை அன்று, யாழ்ப்பாணத்தில் உள்ள பல தேவாலயங்களிலும், கிறிஸ்தவ அமைப்புகளிலும் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாக்களில் கிறிஸ்தவ மக்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கலந்து கொண்டார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பொங்கல் விழா தமிழர்களின் நன்றி தெரிவிக்கும் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஒரு கலாசார விழா. தமிழர்களின் விவசாயக் கலாசாரத்தின் திருநாளாகக் கருதப்படுவது. தமிழர்கள் எல்லோருக்கும் பொதுவானது.

தமிழர்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள். சைவர்கள் என்பதால் உழவர் திருநாளான பொங்கல் விழாவும் இந்துக்களின் விழா என்ற ஒரு நிலை வளர்ந்து விட்டது. உழவன் தனது தொழில் சிறக்கவும், மண் கொழிக்கவும், பயிர் விளையவும் மூலசக்தியாக விளங்கிய சூரியனுக்கு — இயற்கைக்கு — நன்றி செலுத்தி, தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை, மிகுதலை, பொலிவினைக் கொண்டாடுவதே பொங்கல்.

ஆகையால் அப்பெருநாளை, தமிழர்களின் பொது விழாவாக எல்லாத் தமிழ் மக்களும் கொண்டாடுவது சிறப்பானதும் வரவேற்கத்தக்கதுமாகும். தமிழர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் இப்போது கிறிஸ்தவர்களாக உள்ளனர். பொங்கல் போன்ற பொதுப் பண்டிகைகளை அவர்களும் கொண்டாடுவது தமிழர்கள் மதத்தின் பேரால் பிரிந்து நிற்காமல் இனத்தின் பேரால் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ்வதற்கு துணை புரிவதாக அமையும். இது போன்ற நல்ல முயற்சிகள் தமிழர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு வழி காட்டுவதாகவும் உறுதுணையாகவும் இருக்கும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இப்போது தேவைப்படுவது ஒற்றுமை. அவர்கள் மதம் என்றும், சாதி என்றும், குலம் என்றும், வர்க்கம் என்றும் பிரிந்து நின்றால் தங்களுக்குரியவாழ்வின் அடிப்படையான அரசியல் சுதந்திரத்தைப் பெறுவது கடினமாகிவிடும். அதன் பொருட்டு சாதி, குல, வர்க்க பேதங்கள் களையப்பட வேண்டியவை. எல்லோரும் தமிழர்கள் என்ற உணர்வுடன் ஓரணியில் நின்று போராடவேண்டியவர்கள்.

அந்த ஒற்றுமையும், ஓரணியில் நின்று போராடும் தன்மையும் இப்போது நிறைய வளர்ந்திருப்பதாலேயே தமிழர்கள் இன்றைக்குத் தமது போராட்டத்தில் இவ்வளவு துரித வளர்ச்சியைக் காண முடிந்தது. அந்த ஒற்றுமையும், புரிந்துணர்வும் மேலும் வளர்க்கப்படவேண்டும்.

அதன் பொருட்டு பொங்கல் போன்ற தமிழர்களுக்குப் பொதுவான பண்டிகைகள், விழாக்களை எல்லாத் தமிழர்களும் கொண்டாட எடுக்கப்படும் முயற்சி அவர்கள் மத்தியில் ஓர் இன இறுக்கத்தை, ஒற்றுமையை, சமூக விழுமியத்தை, பரந்த நோக்கத்தை உருவாக்கும் என நம்பலாம்.

இந்த முன்முயற்சி ஒரு மதத்தவர் மற்ற மதத்தவரின் பிரதான பண்டிகைகளில் கலந்து கொண்டு சகோதர சகவாழ்வுப் பண்பாட்டை வளர்க்கவும் அத்திவாரமாக அமையலாம்.

எல்லா மதங்களும் ஒரு பரம் பொருளை அடைய வழிகாட்டும் வெவ்வேறு மார்க்கங்களே. ஆகையால் மதங்களின் பெயரால் மக்கள் தூரத்தே விலகி நிற்க வேண்டியதில்லை. ஒருவரின் மத உரிமையில் தலையிடாமல் ஒருவர் மீது மற்றவர் மதத்தைத் திணிக்காமல், பரஸ்பரம் புரிந்துணர்வுடனும் சன்மார்க்க அணுகுமுறையுடனும் வாழப் பழகுதல் சிறப்பை நல்கும்.

இதனைத் தமிழர்கள் தாராள மனத்துடனும், பரந்த நோக்குடனும் உணர்ந்து கொண்டால் அவர்களின் ஒற்றுமையை எந்தச் சக்தியாலும் பிளவுபடுத்த முடியாது. ஏனைய இனங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் திகழ முடியும்.

### நூலக சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாண மாநகர நூலகச் சேவை விரிவுபடுத்தப்பட உள்ளது. யாழ். மாநகர நூலகச் சேவை இடம் பெறும் நல்லூர் கிளை நூலகத்தில் மறுசீரமைக்கப்பட்ட உசாத்துணைப் பகுதி மற்றும் சிறுவர் நூலகம் ஆகியவற்றை அங்குரார்ப்பணம் செய்யும் வைபவம் நாளை ஞாயிறு மாலை 3-00 மணிக்கு மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறும். (இ)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 18

தொய்வு நோய் பற்றிய கருத்தரங்கும், அந்நோயைக் குணப்படுத்தச் செய்யவேண்டிய யோகாசன செய்முறை விளக்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்த ஆதீனத்தில் நடைபெறும். அகில இலங்கை யோகாசன ஸ்தாபனத்தின் இயக்குனர் சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி இக் கருத்தரங்கை நடத்துவார்.

### நூல் வெளியீடும் கருத்தரங்கும்

முகாமைத்துவத்திற்கோர் அறிமுகம் என்ற நூல் வெளியீட்டு விழாவும், "தொண்டமானின் சமாதானத் திட்டத்தில் காணப்படும் சாதக, பாதக அம்சங்கள்" என்ற பொருள் பற்றிய கருத்தரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 1-00 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறும். [த]

★ குயிருப்புக்கள் மீது விழும்போது

# உடனே தகவல் தந்தால் ஷெல் தாக்கு நிறுத்தப்படும்!

## யாழ் தளபதி அளித்துள்ள உறுதி மொழி இது

யாழ்ப்பாணம், ஜன. 18

பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல்கள் வந்து வீழ்ந்து பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், அது குறித்து உடன் தகவல் தந்தால், தாக்குதல் நிறுத்தப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினா உறுதி அளித்திருக்கிறார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவர் திரு. குளோடியா பரான்சினி தலைமையிலான தூதுக்குழு கடந்த புதன்கிழமை பலாலி இராணுவ முகாம் சென்று பிரிகேடியர் விமலரத்தினாவை சந்தித்து.

அவ்வேளை, பலாலியிலிருந்தும் ஏனைய இராணுவ நிலைகளிலிருந்தும் ஏவப்படும் ஷெல்கள் குடாநாட்டின் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் விழுந்து வெடிப்பதால் பாதிப்பு ஏற்படுவது குறித்து செஞ்சிலுவைச் சங்கத்தினர் எடுத்துக் கூறினர். அண்மையில் ஷெல் வீச்சினால் பொதுமக்களுக்கு உண்டான பாதிப்புகளின் விவரங்களைத் தெரிவித்தனர்.

மக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதை நிறுத்துமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஷெல்கள் மக்கள் வாழும் பிரதேசங்களில் விழுவது குறித்து உடன் தகவல் கிடைத்தால் அவற்றை நிறுத்துவதாக இராணுவ பிரிகேடியர் உறுதியளித்ததாக அறிய வந்தது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு பலாலியுடன் நேரடித் தொலைத்தொடர்பு வசதி இல்லை. அதனால் செஞ்சிலுவையினர் தமது கொழும்பு தலைமையகத்துக்கு அறிவித்து அங்கிருந்து கூட்டுப்படை தலைமையகம் ஊடாக பலாலிக்கு தகவல் கொடுக்க ஏற்பாடாகி உள்ளதாகவும் தெரியவந்தது.

### தியாகராஜ சுவாமிகள் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 18

வடஇலங்கை சங்கீத சபையினர் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவம் நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். [த]

## போரூட் நிறுவன செயலர் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 18

போரூட் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் பேர்ஜி ஹெங்கிர்ணஸ் மற்றும் சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி போஹெறாக்ஸ்ரெற் ஆகியோர் உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் உயர்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்திருக்கிறது.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் தமது நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை நேரில் பார்வையிட்டு மதிப்பீடு செய்யவே வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

சுவீடனை தலைமையாகக் கொண்டிருக்கும் சர்வதேச நல்லொழுக்க ஸ்தானமும் [ஐ. ஓ. ஜி. ரி.] நோர்வேயைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் அதன் தோழமை அமைப்பான போரூட்டும் வடக்கில் பல்வேறு புனர்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்தி வருவது தெரிந்ததே. (உ-3)

### எம். ஜி. ஆர் பிறந்த தினம்

சென்னை, ஜன. 18

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், புரட்சித் தலைவருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் 75 ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா நேற்று தமிழகம் எங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. (இ-த)

### சமூக சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 18

சமூக சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று, நாளை ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் கருத்தரங்கிற்குத் தலைமை வகிப்பார்.

"நெருப்புக் காய்ச்சல் நோயும், சூழல் சுகாதாரப் பாதிப்பும்", "எய்ட்ஸ் நோயும் அதன் தடையும்" என்ற தலைப்புகளில் இக் கருத்தரங்கில் கருத்துரைகள் வழங்கப்படும். [இ-18]

### ஆசிரிய கலாசாலை புதிய வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 18

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

### வெங்கட்ராமன் திருச்சி விஜயம்

சென்னை, ஜன. 18

இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் எதிர்வரும் திங்கட்கிழமை திருச்சிக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொள்கிறார். [இ-த]

### கைக்கடிகாரம் தங்கம் கடத்த முயற்சி

கொழும்பு, ஜன. 18

400 கைக்கடிகாரங்களையும், நான்கு தங்க பிஸ்கட்டுகளையும் யாழ்ப்பாணத்துக்கு கடத்திவர முயன்ற இரு தமிழ் இளைஞர்கள் கடந்த செவ்வாயன்று வவுனியா தடை முகாமில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-த)

## ஈழத் தமிழ் அகதிகளை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கமும் பரஸ்பரம் இணக்கம் தெரிவித்துள்ளன.

இரண்டு அரசாங்கங்களும் அண்மையில் இணங்கிக் கொண்டதற்கு ஏற்ப, தமிழகத்தில் உள்ள அகதிகள் ஸ்ரீலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்கு அழைத்து வரப்படவுள்ளனர். திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் அகதி முகாம்களை நிறுவுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அகதிகளில் முதல் தொகுதியினரான 30,468 பேர் இவ்வாரத்தில் இங்கு வந்து சேரவுள்ளார்கள்.

திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகள், ஸ்ரீலங்கா இராணுவத்தின் நிர்வாகத்தில் உள்ள பகுதிகளில் அமைக்கப்படும் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டால், அவர்கள் கொடுமைப்படுத்தப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

#### இப்போது நடக்கும் கொடுமைகள்

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் இயங்கும் அகதி முகாம்களில் தங்கியிருந்த அகதிகளில் பல நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்; தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்; நீதிவிசாரணை இல்லாமல் கொலை செய்யப்பட்டுள்ளனர்; காணாமற் போயுள்ளனர் என்பவை ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அகதி முகாம்களில் நடத்தப்படும் மனிதாபிமானமற்ற இந்தக் கொடுமைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் பல மனித உரிமை இயக்கங்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் தமது வன்மையான ஆட்சேபங்களைத் தெரிவித்துள்ளன.

மேலும், இனப் பிரச்சினை இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை. தமிழர்களின் தாயகத்தில் ஆயுதப்போர் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. அதனால் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எல்லையில்லாத சேதங்கள் விளைவிக்கப்படுகின்றன.

ஆகையால் யுத்தச் சூழ்நிலை நிலவும் பிரதேசத்துக்கு, தமிழ் அகதிகளை பலவந்தமாகத் திருப்பி அனுப்பும் இந்தியாவின் செயற்பாடு, மனிதாபிமானம் இல்லாததும் பொறுப்பற்றதுமாகும். இனவாத இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அகதி முகாம்களுக்கு தமிழ்அகதிகளை அனுப்புவதால் அவர்களின் உயிருக்கும், சுதந்திரத்துக்கும் ஆபத்து நேரிடும்.

#### தவறிவிட்டன

தமிழ் அகதிகள் விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையினதும், சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தினதும் உணர்வுகளுக்கு இணங்கத் தீர்ப்பதற்கு இந்தியாவும், ஸ்ரீலங்காவும் தவறிவிட்டன என்றே நாம் கருதுகிறோம். அவை இரண்டும் அகதிகளின் பாதுகாப்பு, மகத்துவம் ஆகியவற்றைப் பேணும் ஐ. நா. சாசனங்களை மீறிவிட்டன.

ஆகையால், இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகளைப் பலவந்தமாக ஸ்ரீலங்காவுக்குத் திருப்பி அனுப்புவதை நிறுத்துவதற்குத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றின் மூலம் பூரண அமைதி உருவாக்கப்படும் வரை, இராணுவ அட்டூழியங்கள் காரணமாக இந்தியாவிலும், உலகின் ஏனைய பகுதிகளிலும் தஞ்சம் கோரியுள்ள தமிழ் அகதிகளை, ஸ்ரீலங்காவுக்கு திரும்பக் கொண்டுவரப்படக் கூடாது என்று நாம் ஆலோசனை தெரிவிக்க விரும்புகிறோம்.

அவ்வாறு செய்வதன் மூலம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் தமிழ் அகதிகளைப் பலவந்தமாகக் குடியமர்த்துவதற்கு மாறாக, அவர்கள் பாதுகாப்பான சூழ்நிலையில் தமது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியமர வசதி ஏற்படும்.

இவ்விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை அவசரமான உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இந்திய..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக ஆரம்பிப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் அந்த அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன—

இதே வட்டாரங்களின் படி—

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் என்று பிரகடனம் செய்யும் தீர்மானத்தை நோக்கி இந்தியா நெருங்கிச் சென்று கொண்டிருப்பதாகவும்— "ஐலண்ட்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ட-எ]

## போராளி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாய்ந்த சிலைத் தொகுதியினை மக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கும் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு பன்னிரு வேங்கைகள் நினைவுச் சதுக்கக் குழு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ)

## இந்தியப் படையினரும் அகதிகளுடன் வரவேண்டும்

### இப்படிக் கேட்கிறது ரெலோ

லண்டன், ஜன. 18

தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் அகதிகளை அழைத்துச் செல்லும்போது, அந்தக் கப்பலுக்கு முன்பாக இந்திய இராணுவமும் செல்ல வேண்டும்."

ரெலோ அமைப்பு இப்படி கோரிக்கை விடுத்திருக்கிறதாம்.

நாளை மறுதினம் தமிழகத்திலிருந்து 750 அகதிகள் "அக்பர்" கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தாயகம் திரும்பும் அகதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவே இந்திய இராணுவம் செல்லவேண்டும்" என்று ரெலோ கோரியிருக்கிறது.

ஜனவரி 20 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கும் இடையில் "அக்பர்" கப்பல் மூலம் 3 ஆயிரத்து 800 ஈழத் தமிழ் அகதிகள் திருமலைக்கு அனுப்பிவைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையை தமிழகத்தில் உள்ள பல தமிழ்ப் பிரமுகர்கள் கண்டித்துள்ளனர்.

வெளிநாடுகளின் உதவியைப் பெறுவதற்காகவும்— வடக்கு—கிழக்கில் அமைதி நிலவுவதாக வெளியுலகுக்குக் காட்டவுமே இலங்கை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (உ-3)

## ஐ. நா. தூதரக..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈழத்தமிழ் அகதிகளை அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்படுவது குறித்து சர்வதேச நிறுவனங்கள் ஆட்சேபம் தெரிவித்தது தெரிந்ததே.

அதனைச் சமாளிக்கும் விதத்திலேயே புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஐ. நா. தூதரக உதவி கோரப்பட்டதாக அறிவித்திருக்கிறார்.

ஆனால் இவ்விடயம் தொடர்பாக நேற்று வரை ஸ்ரீலங்கா அரசு ஐ. நா. அகதிகள் தூதரக கொழும்பு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவில்லை என்று உதய[illegible]க்குத் தெரிய வந்துள்ளது. [அ-எ-3]

### ப.நோ.கூ.ச. கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பகல் ஒரு மணிக்கு யாழ். கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கூட்டத்திற்கு வரும்போது நெல் கொள்வனவு சம்பந்தமான முழு விவரங்களுடனும் வரும்படி பொது முகாமையாளர்கள் கோரப்பட்டுள்ளனர். [இ]

### அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் அஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன. யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாச கோப்பாய்ப் பிராந்தியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இதன் காரணமாக யாழ். மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்பட இருந்த போயா தினக் கூட்டம் பின்போடப்பட்டுள்ளது. [இ]

### 'உயிர்த்த மனிதர் கூத்து'

யாழ்ப்பாணம், ஜன. 18

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நாடக அரங்கக் கல்லூரி வழங்கும், "உயிர்த்த மனிதர்கள் கூத்து" நாடகம் இன்று 18 ஆம் திகதியும் நாளை 19 ஆம் திகதியும் பெப்ரவரி 1 ஆம் திகதியும் மேடை ஏறுகிறது.

இன்று 18 ஆம் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு அளவெட்டி மாவீரர் கலை அரங்கிலும் நாளை ஞாயிறு பிற்பகல் 4.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், பெப்ரவரி முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கிலும் இந்த நாடகம் மேடை ஏறும். (இ)

### மன்னார் அகதிகள் வருவர்

கொழும்பு, ஜன. 18

தமிழகத்திலிருந்து மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகள் இலங்கை திரும்புவது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாதம் என்று அறிவிக்கப்படுகிறது.

திருமலை, அகதிகள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோருடனான முதலாவது கப்பல் அடுத்த சில தினங்களில் திருமலை வந்து சேர இருப்பது தெரிந்ததே. (இ-எ)

### புங்குடுதீவுப் பகுதியில் பாடசாலை இயங்குகிறதாம்

கொழும்பு, ஜன. 18

புங்குடுதீவில் கடந்த ஆறாம் திகதி முதல் பாடசாலை ஒன்று இயங்குவதாகவும், அதில் 90 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்றும், அங்கு ஏழு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. [இ-எ]

### உப்பள ஊழியர் சம்பளம்

கொழும்பு, ஜன. 18

வட பிராந்திய உப்பளத்தைச் சேர்ந்த நிரந்தர ஊழியர்களுக்கு 1991 ஆம் ஆண்டுக்கான சம்பளம் வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பாக கைத்தொழில், விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சும், நிதி அமைச்சும் கூட்டாகச் சமர்ப்பித்த சிபார்சை அமைச்சரவை ஏற்று அங்கிகாரம் வழங்கி உள்ளது.

இதற்குத் தேவையான பணம் திறைசேரியினால் கைத்தொழில் அமைச்சுக்கு வழங்கிகப்பட்டுள்ளது. [இ]

### ஏழாலை வசந்தபுரம் நாகபூசணி சங்காபிஷேகம்

உரும்பராய் ஜன. 18

ஏழாலை தெற்கு வசந்தபுரம், வசந்தநாக பூஷனி அம்மன் ஆலயத்தின் இரண்டாவது ஆண்டு சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்று காலை அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அறிஞர்களின் சொற்பொழிவுகளும் இடம்பெறும். பண்ணிசை, கூட்டுப் பிராத்தனை என்பனவும் நடைபெற உள்ளன.

நாளைய திருவிழாவின்போது அம்மன் அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு புடைவைகளும், அங்கவீனர்களுக்கு உதவிகளும் வழங்கப்படவுள்ளன. [அ-154]

### தாயகம் திரும்பும் அரச ஊழியருக்கு வேலை

கொழும்பு, ஜன. 18

நாடு திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளில் அரச ஊழியர் அனைவருக்கும் மீண்டும் வேலை வழங்குவது என்று கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து சகல அரச திணைக்களங்களின் தலைவர்களுக்கும் அரசு அறிவித்துள்ளது.

இத்தகவலை புனர்வாழ்வு துணை அமைச்சுச் செயலாளர் டாக்டர் ராஜா அமரசேகரா செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

### கொழும்பு - இராமேஸ்வரம் படகுச் சேவைக்கு முயற்சி

கொழும்பு, ஜன. 18

கொழும்புக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே படகுச் சேவை ஒன்றை ஆரம்பிக்கும்படி ஸ்ரீலங்கா அரசு இந்தியாவைக் கேட்டுள்ளது.

ஸ்ரீலங்கா வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தினா இத்தகவலை வெளியிட்டார்.

இனப்பிரச்சினை தொடர்பாக புதுடில்லி அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு சாதகமான மதிப்பீடு ஒன்றினைக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவர்கள் தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் உதயன் பத்திரிகையை விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

**உதயன் வெளியீட்டகம்**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

**திருமதி**
**வேலயுதபிள்ளை - யோகம்மா**
**(நயினாதிவு)**

யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியராக கடமையாற்றும் திரு. வே. ஞானகாந்தன் அவர்களின் தாயாரின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், உப அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ முத்துத்தம்பி -
மகாவித்தியாலயம்,
திருநெல்வேலி. [19387]

## மரண அறிவித்தல்கள்

**திருமதி**
**சிவயோகம்மா வேலாயுதபிள்ளை**

நயினாதீவு திருமதி சிவயோகம்மா வேலாயுதபிள்ளை அவர்கள் 16-01-1992 இல் பெரியதம்பனையில் காலமானார். இவர் பொன்னர் வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், திருமதி புஷ்பலீலாவதி, திருமதி சாருகாசினி (அதிபர் பெரியதம்பனை மகா வித்தியாலயம்) திருமதி ஈஸ்வரி (அரசினர் வைத்தியசாலை, முல்லைத்தீவு) திருமதி வேதாராகினி, திருமதி நவநிதி (தொழில் திணைக்களம், வவுனியா), ஞானோதரன் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), ஞானவரோதயன் (பிரான்ஸ்), ஞானகாந்தன் (ஆசிரியர், முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ச. கனகலிங்கம் (இ. போ. ., யாழ்ப்பாணம்). திரு. க. சீனிவாசகம் (அதிபர், வவுனியா மகா வித்தியாலயம்), திரு. சோ. மகேஸ்வரன் (இ.போ.ச., முல்லைத்தீவு) திரு. பொ. கலைநாதன் (சுப்பிரமணியம் கொம்பனி கொழும்பு- 1), திரு. க. சிவபாலன் (உப முகாமையாளர், இலங்கை வங்கி வவுனியா), திருமதி நாகரஞ்சனி, திருமதி கலைச்செல்வி, திருமதி கேதாரபூரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், தாரணி, தர்சினி, யாதவன், சசிகரன், மேகலை, விஜிகாந், உமாகாந்த், அகிலா, கிருஷ்ணா, கோகுலன், ராகுலன், அகல்யா, சிற்பரன், நிமலன், ரஜீவ், அபிரா, ஆர்த்தி, மயூரன், சுகப்பிரதா, சுகவரதா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 - 01 - 1992 இல் பெரியதம்பனையில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**வே. ஞானோதரன்**
(இலங்கை வங்கி)

பெரிய தம்பனை,
வவுனியா. [19386]

**திருமதி**
**றோசலின் சுகிர்தமணி**

திருமதி றோசலின் சுகிர்தமணி துரைராசா 16-1-92 அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற வணபிதா A. C. துரைராசாவின் அன்பு மனைவியும், சுவேந்திரிணி, சாந்தினி, ரஞ்சினி, மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி, காலஞ்சென்ற ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வெள்ளவத்தை இல. 17, பிரான்சிஸ் வீதியில் 18-1-92 மாலை 4-00 மணிக்கு நடைபெறும் வேளையில், கோப்பாய் பரி. கன்னி மரியாள் ஆலயத்திலும் அன்று மாலை 3-30 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
**தவமணி செல்வரத்தினம்**
இரத்தின வாசா,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [19381]

சமசமாஜ - கம்யூ. கூட்டறிக்கை:

# அர்த்தமுள்ள அதிகார பரவல் அதுவே அவசரமான பணி!

## பிரேமா அரசுக்கு எதிராக மக்கள் போர்

கொழும்பு, ஜன. 18

★ வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஒற்றையாட்சி என்ற திடமான அடிப்படையின் கீழ் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலே இப்போது செய்ய வேண்டிய அவசர பணியாகும்.

★ பிரேமதாசா அரசுக்கும் அதன் கொள்கைகளுக்கும் எதிராக மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தவேண்டும். அதற்கான ஐக்கிய தலைமைத்துவத்தை வழங்க எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகள் முன்வரவேண்டும்.

—இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

பிரேமதாசா அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகள் நாட்டு மக்கள் மீது பொருளாதார மற்றும் அரசியல் கஷ்டங்களை மேலும் சுமத்துவதாகவே அமைந்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினை பற்றி அந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு சிவில் யுத்தத்திற்கான முழுபொறுப்பையும் ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்கவேண்டும்.

இந்த யுத்தம் குறித்து அரசாங்கம் தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது.

யுத்தம், அது தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக பிரேமதாச அரசிடம் கொள்கை ஏதும் இல்லை; அல்லது சொந்தமாக உத்தி ஏதும் அரசிடம் இல்லை.

லட்சக்கணக்கானோர் வீடிழந்து அகதிகளாகியுள்ளனர். உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. உடைமைகள் மற்றும் பொருளாதார கட்டமைப்புகளுக்கு ஏற்படும் சேதம் கணக்கிடமுடியாதுள்ளது.

ஒற்றையாட்சி என்ற திடமான அடிப்படையின் கீழ் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலே இப்போது செய்ய வேண்டிய அவசர பணியாகும்.

மாகாண நிர்வாகத்தை பிரேமதாசா அரசு நடத்தும் விதம் இந்த முறையை திட்டமிட்டே அவர் உதாசீனம் செய்கின்றார் என்பதை காட்டுகிறது. - என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-ஏ]

## தவறிவிட்டது

651930901V என்னும் இலக்கத்தையுடைய அடையாள அட்டை, உத்தட்டிமட லேனுக்கும், திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கம்பியூட்டர் சயன்ஸ் அக்கடமி, நாவலடி லேன், திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

[19365]

ஏழாலை வசந்தபுரம்
வசந்த நாகபூஷனி அம்மன் கோயில்

## கும்பாபிஷேக தினம்

**19-1-92 ஞாயிறு [நாளை]**

காலை 6-00 மணிக்கு விசேட சங்காபிஷேகம், காவடி, கற்பூர உற்சவம்.

நண்பகல் விசேட பூஜை, பஜனை, சொற்பொழிவு, திரு ஊஞ்சல்.

அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

[19388]

அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் பிராந்திய திணைக்களம், யாழ்ப்பாணம்.**

## 1992 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு [வைத்தியசாலைகள் உட்பட] தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து—மறுபக்கத்தில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து —பதிவுசெய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்.
2. பாவனைப் பொருள்கள் [ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்].
3. வைத்தியசாலை பாவனைக்கான துணிவகைகள்.
4. மரத்தளபாடங்கள்.
5. உருக்குத் தளபாடங்கள்.
6. பிளாஸ்டிக்பொருள்கள் [வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன].
7. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள், ஆமைப் பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை வாரி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியன.
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்.
9. வைத்தியசாலை உபகரணங்கள் [சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள்; சிறுகட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்].
10. கட்டடத் திருத்தத்திற்கு அவசியமான பொருள்கள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் [டயர், ரியூப் உட்பட].

### பதிவுசெய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவுசெய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சன சமூக நிலையங்கள்
7. வருமான்வரி செலுத்தும் பிரசித்திபெற்ற நிறுவனங்கள்

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க் காணும் விலாசத்திலுள்ள எனது பணிமனையில் ரூ. 25 பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று, 06-02-92 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு முன் எனக்கு கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1992 ஆம் ஆண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
10-01-92

வைத்திய கலாநிதி
**ந. கனகசபை**
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்த வாரக் கருத்தரங்கில் திருமதி கோகிலா மகேந்திரன் ''எனது இலக்கிய வாழ்க்கை'' என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

## புதிய உயர் கல்லூரி

**(NEW COLLEGE OF HIGH STUDIES)**
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

**A/L - 93**
**புதிய பிரிவு**

ஆரம்பம்:
**18 - 01 - 1992**
[7-00 மணி]

பொருளியல் — லோகசிங்கம்
வர்த்தகம் — தேவா
கணக்கியல் — யோகராஜா
அளவையியல் — மகேந்திரன்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
தமிழ் — மீரா
புவியியல் — குணராஜா
அரசியல் — கியூபேட்
வரலாறு — அருள்நங்கை
கிறிஸ்தவம் — ஆ. சகோதரர்

(சி-1299)

ஏ. எஸ். பி. உடுகம்பொலவை

# லீவில் செல்ல பணிப்பு!

மணிலா, ஜன. 18

அடுத்த மாத முற்பகுதிக்கு முன்னர் மூன்று மாத கால விடுமுறையில் செல்லுமாறு உயர் பொலீஸ் அதிகாரியான தர்மதாஸ உடுகம்பொலவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்று தகவல் வெளியிட்டது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் 7, 8 ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெற இருக்கிறது. அந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் விடுமுறையில் செல்லுமாறு ஏ. எஸ். பி. உடுகம்பொல கேட்கப்பட்டிருக்கிறாராம்.

ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை என்ற பெயரில் பல் வேறு மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை தர்மதாஸ உடுகம்பொல முன்னின்று நடத்தியதாகக் கருதப்படுகிறது.

தர்மதாஸ உடுகம்பொலவின் குடும்பத்தவர்கள் ஜே. வி. பி. தீவிரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பாரிஸில் நடைபெறும் கூட்டத்தில் உதவும் நாடுகள் பல்வேறு கேள்விகளையும் கிளப்பும் என்று கருதப்படுகிறது. அதனைச் சமாளிக்கும் ஒரு நடவடிக்கையாகவே உடுகம்பொல விடுமுறையில் செல்ல பணிக்கப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது. [உ-த]

## மரண அறிவித்தல்கள்

**P. M. இராசரத்தினம்**
[தலைவர், சத்தியசாயி சேவா நிலையம், தாவடி]

தாவடி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இளைப்பாறிய யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்ட பதிவாளருமாகிய பொன்னம்பலம் முத்துத்தம்பி இராசரத்தினம் 17-01-1992 வெள்ளிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் முத்துத்தம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இரத்தினம்மா, காலஞ்சென்ற மாணிக்கவாசகர், ராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசமகேஸ்வரன் (பொறியியலாளர், U. K.), மதிவதனி, இரஞ்சினி (U. K.), Dr. மாலினி (U. K.), பாலகுமார் (பொறியியலாளர், நோர்வே), ராகினி (U. K.), Dr. இராசகுமார் (நோர்வே), இந்திரகுமார் (பொறியியலாளர், U. K.) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரவதனி (U. K.), சரவணபவான் (சீக்கோ), அரசரத்தினம் (U. K.), சதானந்தன் (பொறியியலாளர், U. K.), ராஜி (நோர்வே), ஜானகி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரேஷ், மயூரேஷ், கார்த்திகா, நிர்த்திகா, ருஜிகேத்தா, நிவேதிகா, இளங்கோ, நீரஜா ஆகியோரின் அன்பு பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18-01-1992) சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**S. R. சரவணபவான்**
(மருமகன்)

பிள்ளையார் கோவிலடி,
தாவடி, கொக்குவில். [19383]

**திருமதி**
**சிவபாக்கியம் அரசரத்தினம்**

காலஞ்சென்ற அரஸ்கோ ஸ்தாபன அதிபர் திரு. அரசரத்தினம் அவர்களின் மனைவி சிவபாக்கியம் 16-1-92 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (19-1-92) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
**சி. உருத்திரலிங்கம்.**
(மருமகன்)

திருமதி நளினி சிவகுமார்,
C/o திரு. சிவா செல்லத்துரை
இல. 10, ரோகினி வீதி,
கொழும்பு- 6.

(19378)

**திருமதி குழந்தைவேலு சின்னம்மா**

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி குழந்தைவேலு சின்னம்மா 17-1-1992 இல் காலமானார்.

இவர் வேலணை கிழக்கைச் சேர்ந்த காலம்சென்ற குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், தங்கராசா, காலம்சென்ற செல்வநாயகம், தியாகராசா, ஆனந்தராசா [ஐங்கரன் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி], சிவராசா [தீபா நகை மாளிகை] ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லையம்மா, இந்திரபூபதி, நாகேஸ்வரி, வள்ளியம்மை, சுசிலாதேவி [ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்ற கற்பகம், காலம்சென்ற கதிரவேலு, காலம்சென்ற செல்லத்துரை, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-1-92 சனிக்கிழமை [இன்று] பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கு. சிவராசா**
[மகன்]

இல. 11/5, பொன்வாசா,
கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [19389]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org